**செய்தி வெளியீடு** **நாள் : 03.09.2025**

**கொளத்தூர் சட்டமன்ற தொகுதியில் வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் சிஎம்டிஏ மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில் நடைபெற்று வரும் அனைத்துப் பணிகளையும் விரைந்து முடித்து, மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவருவதற்காக அலுவலர்கள் மற்றும் ஒப்பந்ததாரர்களை மாண்புமிகு அமைச்சர் திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் அறிவுறுத்தினார்.**

*******

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின்** நல்வழிகாட்டுதலின்படி இன்று (03.09.2025) சென்னை, கொளத்தூர் சட்டமன்ற தொகுதி, ரெட்டேரி சந்திப்பில் வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் சிஎம்டிஏ சார்பில் கட்டப்பட்டு வரும் "**குளிரூட்டப்பட்ட பேருந்து நிறுத்தம்**", கொளத்தூர், பேப்பர் மில்ஸ் சாலையில் கட்டப்பட்டு வரும் புதிய வட்டாட்சியர் அலுவலகம், சார்பதிவாளர் அலுவலகம், பகிர்ந்த பணியிட மையம் எனப்படும் "**மக்கள் சேவை மையம் (Citizen Service Centre)**", கொளத்தூர் **நவீன சந்தை** (**Kolathur Modern Market**), பெரம்பூர், பேப்பர் மில்ஸ் சாலையில் ராஜா தோட்டம் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய குடியிருப்புகள் அருகில் மாநகராட்சி சார்பில் கட்டப்பட்டு வரும் ராஜா தோட்டம் பல்நோக்கு மையம், கொளத்தூர், ஜி.கே.எம். காலனியில் மாநகராட்சி சார்பில் மேம்படுத்தப்பட்டு வரும் மின் மயானம் மற்றும் கொளத்தூரில் மாநகராட்சி சார்பில் மேம்படுத்தப்பட்டு வரும் தாங்கல் மின் மயானம் ஆகிய இடங்களில் நடைபெற்று வரும் முன்னேற்றப் பணிகளை மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான **திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள்** நேரில் சென்று ஆய்வு செய்து, **பணிகளை விரைந்து முடித்திட அலுவலர்கள் மற்றும் ஒப்பந்ததாரர்களை அறிவுறுத்தினார்.**

இந்த ஆய்வுகளின்போது மாண்புமிகு மேயர் திருமதி.ஆர்.பிரியா, சிஎம்டிஏ உறுப்பினர் செயலர்/முதன்மைச் செயலாளர் திரு.கோ.பிரகாஷ், இ.ஆ.ப., மாநகராட்சி மத்திய வட்டார துணை ஆணையாளர் திரு.எச்.ஆர்.கௌஷிக், இ.ஆ.ப., மண்டலக் குழுத்தலைவர் திருமதி.சரிதா மகேஷ்குமார், சிஎம்டிஏ. தலைமைப் பொறியாளர் திரு.மகாவிஷ்ணு, கண்காணிப்பு பொறியாளர் திரு.பாலமுருகன், மாநகர் போக்குவரத்துக் கழக பொது மேலாளர் (வடக்கு) திரு.ராஜசேகர் உள்ளாட்சிப் பிரதிநிதிகள் திரு.ஐசிஎப்.முரளிதரன், திரு.சந்துரு, திரு.மகேஷ்குமார், மாமன்ற உறுப்பினர்கள் திரு.நாகராஜன், திருமதி.தாவூத்பீ, திருமதி.அமுதா, திருமதி.யோகப்பிரியா, திருமதி.ஸ்ரீதணி மற்றும் அரசு அலுவலர்கள் ஆகியோர் உடனிருந்தனர்.

Verified RealEstate ™